**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**PW 1– OS. No. 278/2021**

2023 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி கூடுதல் சார்வு நீதிபதி திருமதி.எம்.மேகலா மைதிலி பி.ஏ.பி.எல் முன்னிலையில் திருமதி.ரேகா கிரேடு 2 பேன்ச் கிலர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திரு.திருமூர்த்தி | தொழில் : |
| த/பெ. : திரு, ராமசாமி | வயது : 61 |
| முகவரி : | |

**வாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி. எனது தரப்பு சாட்சிக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். 6.9.2001 தேதிய பிரதிவாதி பெயரிலான கிரய பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்கான கணினி சிட்டா தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய இருப்பிட முகவரியை காட்டுவதற்காக ஆதார் அடையாள அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். (அசல் சரிப்பார்க்கப்பட்டது)தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்தின் வழிகாட்டுதல் மதிப்பை காட்டுவதற்கான சான்று கணினி நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தரப்பு சாட்சியினை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI

Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2023.08.02 18:34:34 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,

திருப்பூர்.